[14th March 1966

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்யப்பட்டு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : அவர்களுடைய சங்கங்களிலிருந்து ஸ்கேலை அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா ? பரிசீலனை செய்யப்பட்டதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கோரிக்கைகள் வந்தன. கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு அதிலே முடிவு எடுப்பது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

'Son Et Lumiere' Programme

* 284 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to extend the programme styled 'Son Et Lumiere' to the historic temples in the State for explaining the history behind those monuments vividly to tourists; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இந்திய அரசாங்கச் சுற்றுப் பயணத் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய சுற்றுப்பயண கூட்டு நிறுவனம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் "சான்-ஏ-லூமியர்" எனப்படும் கலை நிகழ்ச்சியை நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) அதற்கான ஏற்பாடுகள் இந்திய சுற்றுப் பயணக் கூட்டு நிறுவனத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : அந்தக் கலை நிகழ்ச்சியானது புதிதாகவும் முற்றிலும் வினோதமாகவும் இருப்பதால் அது என்ன மாதிரி காண்பிக்கப்படுகின்றன ? ஒலி ஒளி இரண்டும் கலந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பெரும்பாலும் சரித்திர, கலாசார முக்கியத்துவம் பெற்ற புராதன இடங்களைப் பற்றியதாக இருக்கும். அந்த மாதிரி இடங்களில் முன்கூட்டியே ஒலி, ஒளி அமைப்புகளுடன், முன்பு எவ்வாறு நடந்திருக்கும் என்பதை இப்போது நடப்பது போல் காட்டுகிற நிகழ்ச்சி. பேச்சும் விளக்கமும் அதற்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டிருக்கும்.

'பஸ்' நிலையம், சிதம்பரம்

* 285 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் நகரசபை மூலம் சிதம்பரத்தில் இரண்டாவது பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா ?